**செய்தி வெளியீடு எண் : 1950** **நாள் : 07.11.2022**

# <u>வடகிழக்கு பருவ மழை – 2022</u>
# <u>முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் இன்று (07.11.2022) மாநில அவசரகால செயலாக்க மையத்தில் ஆய்வு</u>

- நேற்றைய தினம் (6.11.2022) தமிழ்நாட்டில் 33 மாவட்டங்களில் **6.39 மி.மீ. மழை** பெய்துள்ளது.
- இதில் **திருவாரூர்** மாவட்டத்தில் அதிகபட்சமாக **24.98 மி.மீ.** பெய்துள்ளது.

வடகிழக்கு பருவமழை காலத்தில் மொத்தம் 26 மனித உயிரிழப்புகள் பதிவாகியுள்ள நிலையில், 6.11.2022 அன்று மனித உயிரிழப்பு பதிவாகவில்லை. இறந்த நபர்களது குடும்பத்திற்கு ரூ.4.00 லட்சம் நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நேற்று பெய்த கனமழையின் காரணமாக 6.11.2022 அன்று

- 23 கால்நடை இறப்புகள் பதிவாகியுள்ளது.
- 45 குடிசைகள் / வீடுகள் சேதமடைந்துள்ளன.

**பெருநகர சென்னை மாநகராட்சி**

- 6.11.2022 முடிய பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கனமழை காரணமாக விழுந்த 71 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.
- 169 நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
- மழை நீர் தேங்கியதால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் 29.10.2022 முதல் 05.11.2022 முடிய மொத்தம் 2,83,961 உணவு பொட்டலங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 648 இடங்களில் தேங்கி இருந்த மழை நீர் முழுவதுமாக வெளியேற்றப்பட்டுள்ளது.
- மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 833 நீர் இறைப்பான்கள் தயாராக உள்ளன.

**வானிலை முன்னறிவிப்பு**

- அடுத்த 4 நாட்களுக்கான முன்னெச்சரிக்கை இந்திய வானிலை ஆய்வு மையம் மூலமாக வரப்பெற்றுள்ளது.
- **7–11–2022 மற்றும் 8–11–2022** ஆகிய நாட்களில் **சில இடங்களில்** இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
- **9–11–2022** அன்று **பல இடங்களில்** இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
- **9–11–2022** அன்று இலங்கைக்கு அருகே தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் **குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகக்கூடும்** என்றும், இது வடமேற்கு திசையில் தமிழக கடற்கரையை நோக்கி நகர

வாய்ப்பு உள்ளது என்றும் இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 4.11.2022 நாளிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **10-11-2022** அன்று செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் **ஓரிரு இடங்களில் கனமழை** பெய்யக்கூடும்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.11.2022 அன்று மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தை ஆய்வு செய்து முன்னெச்சரிக்கை, நிவாரண நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின் படி** வடகிழக்கு பருவமழையை திறம்பட எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம்**

- இன்று நண்பகல் 12.00 மணி நிலவரப்படி செம்பரம்பாக்கத்தில் மொத்த கொள்ளளவு 24 அடி, தற்போது 20.61 அடி இருக்கிறது. தற்போது செம்பரம்பாக்கத்திற்கு 19 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. 713 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.
- அதே போல, செங்குன்றம் (புழல்) ஏரியின் மொத்த கொள்ளளவு 21.20 அடி, தற்போது 18.73 அடியாக இருக்கிறது. தற்போது செங்குன்றம் ஏரிக்கு 165 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. 292 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in